# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 233/மா/2017/

ஆணை எண்: 271/2017

நாள்: 01/12/2017

திரு. நீலேஷ்,
கீழ்ப்பாக்கம்,
சென்னை. - முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் – 8,
பெருநகர சென்னை மாநகராட்சி. - எதிர் மனுதாரர்

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, கீழ்ப்பாக்கத்தைச் சேர்ந்த திரு. நீலேஷ் என்பவரின் 23.11.2017 நாளிட்ட மின்னஞ்சல் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 233/2017/மா எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

2) முறையீட்டாளர் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்–8, கீழ்ப்பாக்கம் ப்ளவர்ஸ் ரோடு நெடுகிலும் கழிவுநீர் கால்வாயில் கழிவுநீர் தொடர்ந்து வழிந்தோடி பொது மக்களுக்கு சுகாதார கேடு விளைவிப்பதாக சென்னை பெருநகர குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வாரியத்திற்கு அனுப்பியுள்ள மின்னஞ்சலில் புகார் தெரிவித்துள்ளார். இந்நேர்வில் சென்னை பெருநகர குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வாரிய பகுதிப் பொறியாளருடன் மாநகராட்சியின் 8வது

மண்டல அலுவலர் கலந்துபேசி உரிய நடவடிக்கை எடுத்து, அப்பகுதியில் சுகாதாரப் பராமரிப்பினை உறுதிசெய்ய அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

// உண்மை நகல் //

செயலாளருக்காக.

**பெறுநர்**

மண்டல அலுவலர்,
மண்டலம்-8,
பெருநகர சென்னை மாநகராட்சி
36B, 2வது குறுக்குத் தெரு, புல்லா அவென்யு,
ஷெனாய் நகர், சென்னை -600 030.

**நகல்:**

திரு. நிலேஷ்,
18-ஏ, பிளவர்ஸ் தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை.